**அசல் வழக்கு எண்.17/2018**

**தேதி: 19.03.2025.**

**வா.சா.1: 22.09.2023 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 9, 12 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**சாட்சி பெயர்- திருமதி. சாவித்திரி, க/பெ. ராமசாமி**

**9, 12 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

என் தந்தையின் பெயர் கோபால் நாயுடு. தாயார் பெயர் ஜெயலட்சுமி. என் அப்பா அம்மாவிற்கு மொத்தம் 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் முதல் வாதி. எனக்கு சரஸ்வதி என்று மற்றொரு பெயரும் உண்டு. 2வது வாதி ஆண்டாள் என் தங்கை. முதல் பிரதிவாதி பேபி சரோஜா என் மூத்த அக்கா. பேபி சரோஜாவிற்கு பிறகு ராமு என்கின்ற என் அண்ணன் பிறந்து அவருக்கு திருமணமாகி அதற்கு பின்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

இறந்து போன ராமுவின் வாரிசுகள் தான் 2 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். நடராஜன் என்பவர் என் அண்ணன், இந்த வழக்கில் 8வது பிரதிவாதி என்றால் சரிதான். அதேபோல், 9வது பிரதிவாதி என் அண்ணன் என்றால் சரிதான். பேபி சரோஜாவின் வாரிசுகள் 10 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தந்தை கோபால் நாயுடு என்ன வேலை செய்து வந்தார் என்றால் மளிகை கடை வைத்திருந்தார்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9வது வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சொல்லியுள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். தாவா சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறித்து எனக்கு தெரியுமா

என்றால் இடம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும், ஆனால் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறித்து தெரியாது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அவற்றை நான் பார்த்தால் தெரியும்.

பேபி சரோஜா என்பவருக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் 1957-ஆம் வருடம் திருமணம் நடந்தது. எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் 1972-ல் திருமணம் நடந்தது. 2ம் வாதி ஆண்டாள் என்பவருக்கு 1977-ல் திருமணம் நடந்தது. என் அப்பா எந்த வருடம் மளிகை கடையை ஆரம்பித்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. எந்த வருடம் வரை மளிகை கடை வைத்திருந்தார் என்றால் 1959 வரை வைத்திருந்தார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.